# இயேசு ஊழியங்கள்

105/229, எம்.டி.எச் ரோடு, வில்லிவாக்கம், சென்னை – 600 049
போன்: 9003009752
மின்னஞ்சல்: beten.yatsar@angeltv.org இணையதளம்: www.jesusministries.org


பிரியமுள்ள என் அன்பு மகளே,

அதிசீக்கிரமாக வரப்போகும் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் தேவனுடைய சமாதானத்தையும் என் அன்பின் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேதத்தில் ஆண்டவராகிய கர்த்தர் உங்கள் கருவில் இருக்கும் உங்கள் குழந்தையை நோக்கி சொல்லும் வார்த்தையைச் சற்று கவனத்தோடு வாசித்துப்பாருங்கள்.

*“உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்” (ஏசாயா 54:17)*

ஆம், இந்தக் கர்ப்பக் காலங்களில் இன்றைக்குப் பலவித பயத்தோடும் கலக்கத்தோடும் இருக்கும் நீங்கள் இந்த வார்த்தையை விசுவாசிக்கவேண்டும். நீங்களும், உங்கள் கருவில் இருக்கும் குழந்தையும் தேவனுடைய கரத்துக்குள் இருக்கிறீர்கள் அதனால் உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் விரோதமாய் உருவாக்கப்படும் சாத்தானின் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம். அதனால் நீங்கள் தைரியமாக இருக்கவேண்டும். நல்ல சுகத்தோடு, ஏற்றகாலத்தில் சுகப்பிரசவத்தில் உங்கள் குழந்தையை நீங்கள் பெற்று எடுப்பீர்கள். எந்தக் கலக்கமும், பயமும் இல்லாமல் இந்தக் கர்ப்பக் காலங்கள் முழுவதும் தேவனைத் துதித்து மகிமைப்படுத்துங்கள்.

இப்பொழுதும் உங்களுக்காக ஜெபிக்கப்போகிறேன் என்னோடு இணைந்து இந்த ஜெபத்தை விசுவாசத்தோடு ஏறெடுங்கள்.

மகா பரிசுத்தமுள்ள எங்கள் அன்பின் பரலோகப் பிதாவே, இதோ இப்போது எனது அன்பு மகளையும், குழந்தையையும் உம்முடைய பாதுகாப்பின் கரத்திற்குள் ஒப்புக்கொடுக்கிறேன். இந்த நாள் வரைக்கும் இவர்களைக் கண்ணின் மணி போல் பாதுகாத்து வழிநடத்தி வந்ததிற்காக உமக்கு நன்றிகளைக் கூறுகிறேன். இந்த நாளிலும் இவர்களுக்கு விரோதமாய் சாத்தான் கொண்டுவருகிற எந்த ஆயுதமும் வாய்க்காதேபோகட்டும். உமது தீர்க்கத்தரிசன அபிஷேகத்தால் இருவரையும் நிரப்பி வழிநடத்தும். ஏற்றகாலத்தில் சுகப்பிரசவத்தில் குழந்தையைப் பெற்றெடுக்க உதவிசெய்யும். அதற்கான பெலத்தையும் தந்து வழிநடத்தும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் எங்கள் பரிசுத்தமுள்ள நல்ல பிதாவே. ஆமென்.

என் அன்பு மகளே, ஏசாயா 54:17ம் வசனத்தை விசுவாசத்துடன் பிடித்துக் கொள்ளுங்கள். எல்லா பயத்தையும் புறம்பே தூக்கிப்போடுங்கள். நீங்கள் மற்றும் உங்கள் குழந்தை, தேவனுடைய பலத்த கரத்துக்குள் இருக்கிறீர்கள். கர்த்தர் நிச்சயமாக உங்களையும் உங்கள் கர்ப்பத்தின் கனியையும் ஆசீர்வதிப்பாராக. பயப்படாமலும், கவலைப்படாமலும் மனமகிழ்ச்சியாக இருங்கள்.

மேலும் ஜெப உதவிக்கு எங்களோடு தொடர்புகொள்ளுங்கள் : 9003009752

அன்புடன்

சாது சுந்தர் செல்வராஜ்

*குறிப்பு : உங்கள் ஏஞ்சல் டிவி-யில் பெட்டன் யாட்சார் நிகழ்ச்சி ஒவ்வொரு புதன் கிழமை மதியம் 3 மணிக்கும், அதன் மறுஒளிபரப்பு ஞாயிற்றுக் கிழமை மாலை 5:30 மணிக்கும் ஒளிபரப்பாகும். காணத்தவறாதீர்கள்.*